Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 51/2024**

DATE :12.06.2026

Depositions of witness for Prosecution

PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name | ஆனந்த் | Caste | |
| Father/Husband's Name | தன்ராஜ் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of June 2026

**(எதிரிகள்ஆஜர். வழக்கறிஞர் திரு. பாண்டியராஜ் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் ஆகாசம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டோம். என்னிடம் காண்பிக்கப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்தை என்னுடையதுதான். சமாதான மனுவில் கையெழுத்து செய்ய என்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை நான் தன்னிச்சையாக தான் கையெழுத்து செய்தேன். எனக்கு சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார்

மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நானும் ஆஜர் எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டோம் என்று சொன்னால் சரிதான். எவ்வித கட்டாயமும் இன்றி தன்னிச்சையாக தான் சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 51/2024**

DATE : 12.06.2026

Depositions of witness for Prosecution

PW: 2

| | | | |
|---|---|---|---|
| Name | கோட்டியப்பசாமி (சார்பு ஆய்வாளர் ) | Caste | |
| Father/Husband's Name | பாலையா | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of June 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திருமதி முத்துக்கனி ஆஜர்)**

<u>முதல் விசாரணை</u> –

நான் தற்போது வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கந்தசாமி மற்றும் சார்பு ஆய்வாளர் திரு. பிரகஸ்பதி ஆகியோர்கள் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையத்திற்கு சென்றுவிட்ட காரணத்தினால் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் அரசு

தரப்பு சாட்சி எதிரிகளுடன் சமாதானமாக சென்று விட்டதாக சமாதான மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த காரணத்தினால் வழக்கினை நிலுவையில் வைத்திருப்பதால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்கின்ற காரணத்தினாலும், வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க வேண்டிய ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 08.05.2022 ம் தேதி 14.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கந்தசாமி நிலையப் பொறுப்பில் இருந்த போது ஆனந்த் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நி.கு.எண்.114/2022, சட்டப்பிரிவுகள் 448, 324 இதச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு வழக்கை மேல் விசாரணைக்கு சார்பு ஆய்வாளர் பிரகஸ்பதி அவர்கள் எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன், அய்யனார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசா.ஆ.3 மற்றும் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ஆனந்த், சரோஜா, மணிமாறன், அழகுலட்சுமி, முத்துபிரேமா, அய்யனார், முருகன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

1, 2 எதிரிகள் திருவில்லிபுத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் சரண்டர்மனு தாக்கல் செய்யப்பட்டு ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு